பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை 13.10.2024 கதிர் 340



## ஊடகவியலாளர் சிவராம், லலித், குகன் கொலைகளின் விசாரணை மீது கவனம்

### துரிதப்படுத்த அமைச்சர் உத்தரவு

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை லலித் குகன் காணாமலாக்கப்பட்டமை உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுபொலிஸாருக்குஉத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதில்பொலிஸ்மாஅதிபருக்குபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சிஐடியினருடனும் உரியபொலிஸாருடனும் இணைந்து செயற்படுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பு பதில் பொலிஸ்மா அதிபர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகபொலிஸ் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி செயலாளர் பதவி 'டம்மி'யாக்கப்பட்டுள்ளது, ஊழல் மோசடி செய்து மாகாண சபையில் அமைச்சராக இருந்து இடைநிறுத்தப்பட்டவரே வன்னி வேட்பாளர் அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார். இவரும் ஒரு மருத்துவர்.

''கட்சியின் செயலாளர் பதவி என்பது பொறுப்புமிக்கது. இன்று 'டம்மி'யான புல்லுருவிகளால் அந்தப் பதவி நாசமாக்கப்பட்டுள்ளது. பதில் செயலாளர் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு பதவி விலகவேண்டும். அத்துடன், மாகாணசபையில் ஊழல் மோசடி செய்ததால் அமைச்சரில் இருந்து இடைநிறுத்தப்பட்டவரே இப்போது கட்சியின் வன்னி மாவட்ட தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்'' ☞ 2

## ஜனநாயகக் கூட்டணியில் குறைகள் பல இருக்கின்றன

### ஆனாலும் ஒற்றுமை அதன் பலம் என்கிறார் ஆனந்தன்

ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியில் குறைகள் இருந்தாலும் ஒற்றுமையாகப் பயணிக்கும் சக்தியாக அதுவே இருப்பதால் தமிழ் மக்கள் அதனையே தெரிவு செய்யவேண்டும் என்று அந்தக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் ☞ 8

### 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

## 196 ஆசனங்களுக்கு 8,300 பேர் போட்டி

2024ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் 196 பிரநிதிகளை நேரடியாக மக்களிடத்திலிருந்து தெரிவு செய்யவதற்காக 8,388 பேர் போட்டியிடுகின்றனர். ☞ 8

## 114 சீனர்கள் கண்டியில் கைது

இணையவழிநிதிமோசடியில் ஈடுபட்ட 114 சீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக ☞ 8

## கொலை, கடத்தல், காட்டிக்கொடுப்பு செய்யாதோர் தமிழ் அரசில் மட்டுமே

### மட்டக்களப்பில் சாணக்கியன் முழக்கம்

**தமிழ் தேசிய பரப்பில் கொலை செய்யாதவர்கள், கடத்தல் செய்யாதவர்கள், காட்டிக்கொடுக்காதவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுகின்றனர். ஏனைய கட்சிகளில் இவ்வாறான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.**

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.**

**இம்முறை நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்கள் இதன்போது** ☞ 2

## இன்று 3 மணிவரை மட்டுமே அவகாசம்

ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது பரப்புரை வரவு, செலவு அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு இன்று பிற்பகல் 3 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில் 13 பேர் மட்டுமே தேர்தல்கள் ஆணையகத்தின் பரப்புரைச் செலவீனம் குறித்த விதிமுறைகளுக்கு அமைய அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கலாநிதிவிஜயதாசராஜபக்சமற்றும் ☞ 8

## வெள்ளப் பாதிப்புக்கு உடனடி நிவாரணம்

### ஜனாதிபதி பணிப்பு

நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு ☞ 2

### யாழ்ப்பாணத்தில் தரவில்லை

## திருமலையில் என்னை கேட்கச் சொன்னார்கள்

### தவராசா ஒப்புதல் வாக்குமூலம்



நான் யாழ்ப்பாணத்தில் போட்டியிடக் கேட்டேன். ஆனால் என்னை திருகோணமலை அல்லது கொழும்பில் போட்டியிடச்சொன்னார்கள்,தமிழ்அரசுக் கட்சிக்குள் தனிமனிதனின் செல்வாக்கு தீவிரமடைந்துள்ளது. தொடர்ந்தும்தமிழ் தேசியத்திலிருந்து விலகிச் செல்லும் தரப்புடன் பயணிக்க முடியாது என்று மாம்பழம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைமை வேட்பாளரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

மாவை.சோ.சேனாதிராசாவை அவரது இல்லத்தில் வைத்து நேரில் சந்தித்து உரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக்கிளையின் தலைவராகவும், மத்தியகுழுவின் அங்கத்தவராகவும் 14 ஆண்டுகளாக இருந்து வருகின்றேன். ஆனால் எந்தவிதமான காரணங்களும் இன்றி நியமனக்குழுவில் எனக்கு இதுவரையில் வழங்கப்பட்டுவந்த அங்கத்துவம் நீக்கப்பட்டுள்ளது. ☞ 2

## தமிழ் அரசை ஒழுங்குபடுத்தி வலுவான சக்தியாக்குவேன்

### மாவை சேனாதிராசா அறிவிப்பு

எனது பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில்தான் கட்சியின் தலைமைப் பொறுப்பினைத் ☞ 2

## தமிழ் அரசு வெற்றிக்காக நாம் உழைக்கவேண்டும்

### சங்கு சின்னத்தை அபகரித்தது முண்பாடு என்கிறார் யாழ்ப்பாண வேட்பாளர் சிறீதரன்

ஜனாதிபத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பால் நிறுத்தப்பட்ட வேட்பாளரின் சங்குச்சின்னத்தை ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி தன் வசப்படுத்தியது ஒரு முரண். அதனால் வேட்பாளர் தெரிவு சரியா என்கிற முரண்பாட்டைவிட தமிழ் அரசுக் கட்சியின் வெற்றிக்கா இப்போது உழைக்கவேண்டும் என்றுதமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசு கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று விஜயதசமி விழாவும் மாவட்டத்தின் இலங்கை தமிழ் அரசு கட்சியினுடைய வட்டார உறுப்பினர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளின் ☞ 2

## 20 முன்னாள் அமைச்சர்கள் அரச வீடுகளில் ஆக்கிரமிப்பு

### உடனே வெளியேற உத்தரவு

கடந்த ஆளும்தரப்பில் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்து அரச வீடுகளில் வசித்த 31 அரசியல்வாதிகளில் 11 பேர் மாத்திரமே அவற்றை மீளக் கையளித்துள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்தஆட்சியில் அமைச்சர்கள் வசிப்பதற்காக கொழும்புக்குள் வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றை மீளக்கையளிக்குமாறு நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட கையோடு அவற்றை உடன் மீள ஒப்படைக்கும்படி அமைச்சு அறிவித்திருந்தது. ☞ 8

## இனி இது .....

எனவும் அவ் கூறியிருக்கிறார்.

தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய நிலை தொடர்பாக வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இனைத் தெரிவித்திருக்கிறார்.

பதில்பொதுச்செயலாளருக்குஎதிராகத்தான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளளார் என்றும், இவர்களை இப்படியே விட்டால் கட்சிக்குஇன்னும்பலகேடுகளைசெய்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

"ஊழல்வாதிகளை அகற்றுவேன் என்றே அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தார். தமிழ் அரசுக் கட்சி தெரிவு செய்தவர்கள் ஊழல் மோசடிக்காரர்கள். மாகாண சபையில் ஊழல் என்று சொல்லி நிரூபிக்கப்பட்டு முதலமைச்சரால் இடைநிறுத்தப்பட்டவர்.

பின்னர் நீதிமன்றிற்கு சென்று தாங்கள் நியாயவாதிகள் என்று இன்றுவரை நியாயப்படுத்த முடியாதவர்கள். இவர்கள்தான் ஊழல்வாதிகள். அவர் வன்னியில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுகிறார். முல்லை மாவட்டத்தில் போடப்பட்ட மூவரும் ஏதோ ஒரு விதத்தில் அப்படியானவர்கள். ஒருவர் தேர்தல் கேட்பதற்கே பொருத்தமில்லாதவர். இரட்டைக் குடிஉரிமை கொண்டவர். அவர் நாடாளுமன்றுக்குசெல்லமுடியுமா? அடுத்தவர் புலிகள் காலத்தில் ஊழல் மோசடிக்காக அடைத்து வைக்கப்பட்டவர். இன்னொருவர் பகிரங்கமாகவே ஊழல்மோசடியில்சிக்கியவர் இன்று அவர்கள் எல்லாம் தமிழ் அரசுக் கட்சியின்வேட்பாளர்கள். நல்லதேநடக்கட்டும். நிச்சயமாக நான் குற்றப்பத்திரிகையினை தனித்தனியாக தாக்கல் செய்வேன்.

நாம் பயந்தவர்கள் அல்லர். கடசிவரை தமிழ் அரசுக் கட்சிக்கு உள்ளே இருந்து குரல் கொடுப்போம். உயிர் இருக்கும்வரை தமிழ் அரசுக் கட்சியோடு தான் பயணிப்பேன்" என்றார் அவர்.

அவரும் ஒரு மருத்துவர். கட்சியின் செயலாளரும் ஒரு மருத்துவர். அதுபோகட்டும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவமோகன் சொல்வதைப் போன்று சத்தியலிங்கம் மாகாண சபை அமைச்சுப் பதவியில் இருந்து ஊழல் குற்றச்சாட்டுக்களால் நீக்கப்படவில்லை என்பதே உண்மை. முதலமைச்சராக இருந்தவரானவிக்னேஸ்வரனின்அத்துமீறல், அடாவடிகளால் தமிழ் அரசுக் கட்சி அவருக்கு ஒத்துழைப்பதில்லை என்று முடிவெடுத்து, அவரது அமைச்சரவையில் மிழ் அரசுக் கட்சியின் எந்தவொரு மாகாண சபை உறுப்பினரும் அமைச்சராகப் பதவி வகிப்பதில்லை என்று தீர்மானித்தபோது பதவி விலகியவர்.

மாகாண சபை அமைச்சர்கள் ஊழல் செய்தார்கள் என்று எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில்முதலமைச்சரால்நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் சத்தியலிங்கம் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. அந்தக்குற்றச்சாட்டைச் சுமத்தியவரே அது தொடர்பில் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்து. சத்தியலிங்கம் குற்றமற்றவர் என்பதைக் குறிப்பிட்டது மட்டுமன்றி, அவரால் மாகாண சுகாதாரத்துறையில் செயற்படுத்தப்பட்டு வந்த திட்டங்களுக்கு மாகாண சபை முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தது.

ஆனால், தமிழ் அரசுக் கட்சியுடன் இருந்த கோபத்தில் தனது முதலாவது அமைச்சரவையை ஒட்டுமொத்தமாகக் கலைத்துவிட்டுப் புதிய அமைச்சரவையை நியமிக்கவேண்டும்என்பதில்குறியாகஇருந்த விக்னேஸ்வரன் (இதனை அவர் தனது பங்காளிக் கட்சிகளுடனான ஒரு கூட்டத்தில் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்) சத்தியலிங்கம் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க மீண்டும் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்படும் என்று அறிவித்தார். ஆனால் தமிழ் அரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களது முடிவுப் படி சத்தியலிங்கம் பதவி விலகியதன் பின்னர் அப்படியொரு விசாரணைக்குழு நியமிக்கப்படவேயில்லை என்பதிலிருந்தே விசாரணைக் குழுவின் நோக்கம் அவரைப் பதவி விலக்குவதுதான் என்பதும் நிரூபணமாகியது.

முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட ஊழல் விசாரணைக்குழு அப்போது விவசாயத்துறை அமைச்சராகஇருந்தவரானஐங்கரநேசன்தான் குற்றமிழைத்திருக்கக்கூடியவர் என்று அடையாளப்படுத்தியது. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு சட்டபூர்வ விசாரணை முதலமைச்சரால் நடத்தப்படவேயில்லை. பின்னர் அதே ஐங்கரநேசனோடு முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியல் கூட்டு வைத்துக்கொண்டார். இப்போது அதே ஊழல் குற்றச்சாட்டு ஐங்கரநேசன் ஜனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர்.

உண்மையில் ஊழலுக்கு எதிராகத்தான் மருத்துவர் சிவமோகன் பேசுகிறார் என்றால் அவர் ஐங்கரநேசனைப் பற்றித்தான் பேசியிருக்கவேண்டும். அவர் சொல்வதைப் போன்று தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ஓடிப்போய் மாம்பழம் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் போன்றவர்களைத்தான் அவர் விமர்சித்திருக்கவேண்டும். ஆனால், தனக்கும்தான் கேட்டவர்களுக்கும்வேட்பாளர் வாய்ப்பு தரவில்லை என்பதற்காகவே அவர் கொதிக்கிறார் என்பது தெளிவானது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கொலை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்தனர்.

அந்தவகையில், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்ததாவது:

நீண்ட காலத்துக்குப் பின்னர் தூய்மையான தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களைக்கொண்டவேட்பாளர்களைக் கொண்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி களமிறங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது வேட்பாளர்கள் சிறந்த வேட்பாளர்கள் என்ற கருத்து நிலவுகிறது.

எமது கட்சியில் ஊழலற்ற, கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபடாதவர்களை எமது வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கியுள்ளோம்.

ஏனைய கட்சிகள் இது தொடர்பில் பேசமுடியாது. கடந்த காலத்தில் ஊழல் மோசடிகளில் அதிகளவில் ஈடுபட்டவர்களே ஏனைய கட்சிகளில் போட்டியிடுகின்றார்கள்.

தமிழ் தேசிய பரப்பில் கொலை செய்யாதவர்கள், கடத்தல் செய்யாதவர்கள், காட்டிக்கொடுக்காதவர்கள் இலங்கை தமிழரசுக் கட்சி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுகின்றனர். ஏனைய கட்சிகளில் இவ்வாறான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஏனைய பிரதான கட்சிகளைப் பார்த்தால் தமிழ் பேசும் மக்களாகவே களமிறக்கப்பட்டுள்ளார்கள். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி இரண்டிலும் இரு இனங்களையும் சேர்ந்தவர்கள் போட்டியிடுகின்றார்கள். முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

கடந்தகாலத்தில்எமதுகட்சியின்வேட்பாளர் தெரிவின்போது சிற்சில விமர்சனங்கள் இருந்தன. ஆனாலும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களுக்கு தமிழ் அரசுக் கட்சியை ஆதரிக்கக்கூடிய வகையில் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் போட்டியிட்ட இருவர் மட்டுமே இம்முறை போட்டியிடுகின்றோம். ஏனைய ஆறு வேட்பாளர்களும் புதிய முகங்களாகக் களமிறக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த நான்கு வருட காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தாலும்கூட இலஞ்சம், ஊழல் மோசடி, காணி அபகரிப்பிலேயே அவர்களின்காலங்களைக்கடத்தியிருந்தார்கள். இன்னுமொருவர் இதுதான் நான் இறுதி முறை என்று தேர்தலில் போட்டியிட்டு அவரது கூடுதலான காலத்தினை லண்டனில் கழித்துவிட்டு தேர்தலில் குதித்திருகின்றார்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு தெரியும் தமிழ் அரசுக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்ற ஒரேயொருவர் நான். மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் சகல வேலைத் திட்டங்களையும்முன்னெடுத்திருக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் எனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றேன். நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு ஆசனங்களைபெறவேண்டும்என்பதற்காகவே உழைத்துக்கொண்டிருக்கின்றோம் என்றார்.

## திருமலையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாகக் கேள்விகளைத் தொடுத்தபோது உரிய பதில்கள் கிடைக்கவில்லை.

நியமனக்குழுவில் மட்டக்களப்பில் 4 பேருக்கு அங்கத்துவம் வழங்கப்பட்டபோதும் கொழும்புக் கிளைக்கு எந்தவிதமான அங்கத்துவமும் அளிக்கப்படவில்லை.

அதேநேரம், நான் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருந்தேன். ஆனால்யாழ்.தேர்தல் மாவட்டதில் போட்யிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பின்னர் திருகோணமலையில் அல்லது கொழும்பில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கத் தயாராக இருப்பதாக தூது அனுப்பப்பட்டது.

சுமந்திரன் தனக்குச் சாதகமான நியமனக்குழுவை நியமித்து வேட்பாளர்கள் பட்டியலை அறிவித்துள்ளார். குறிப்பாக யாழ். தேர்தல் வேட்பாளர் பட்டியலைப் பார்க்கின்றபோது, சுமந்திரனுக்குச் சார்பான ஆறுபேர்வேட்பாளர்பட்டியலில்இருக்கின்றனர்.

அதுமட்டுமன்றி தமிழ் அரசுக் கட்சியில் பல தடவைகள் சுட்டிக்காட்டிய விடயம்தான் நியமனக் குழுவானது தங்களைத் தாங்களே வேட்பாளர்களாக தெரிவு செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இது மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதையும் சுட்டினேன். ஆனால் எதுவும் நடைபெறவில்லை.

மூத்ததலைவர்மாவையின்பரிந்துரைகள் மதிக்கப்படவிவில்லை. சுமந்திரன் தனியொருவராக இந்த விடயங்களையும் தனக்குச் சாதகமாக்கியுள்ளார். ஆகவே சர்வாதிகாரப் போக்கு அதிகமாகயுள்ள அவ்விதமானதொரு கொள்கை தவிறிய கட்டமைப்பில் தொடர்ச்சியாக இருப்பதால் எவ்விதமான பயன்களும் இல்லை.

அதன் காரணமாகவே தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளேன். எமக்கு மாம்பழம் சின்னம்வழங்கப்பட்டுள்ளது. நாம்தமிழ்அரசுக் கட்சியின் உண்மையான கொள்கையுடன் பயணிக்கவுள்ளோம்.

அத்துடன் மாவை.சேனாதிராசாவை நேரில் சந்தித்து உரையாடியுள்ளோம். அவர் தமிழ்த்தேசியத்துடனான எமது பயணத்துக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் என்றார்.

## தமிழ் அரசை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறந்தேன். ஆனால், எதிர்காலத்தில் கட்சியை ஒன்றுபடுத்தி தமிழ் மக்களின் இலட்சியப் பயணத்திற்கான வலுவான சக்தியாக மாற்றுவதற்காகப் பணியாற்றவுள்ளேன் என்றார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையிலான சுயேச்சையாக களமிறங்கியுள்ள தரப்பினருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறி சுயேச்சையாகக் களமிறங்கியுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையிலான குழுவினர் என்னை நேரில் வந்து சந்தித்தனர்.

அவர்கள் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றமைக்கான காரணத்தையும், தங்களுடைய கொள்கை சார்ந்த பயணத்தின் நோக்கத்தினையும் வெளிப்படுத்தினார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் கட்சியில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள்கூட நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காரணத்தினாலேயே நான் பதவியில் இருந்து விலகினேன். இருப்பினும் நான் கட்சியின் உறுப்பினராக தொடர்ந்தும் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் ஈடுபடுவேன்.

அதேநேரம், கட்சியில் இருந்து பலர் வெளியேறி தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கின்ற கட்சிகளில் பலர் போட்டியிடுகின்றார்கள். இந்தநிலைமையானது எனக்குக் கவலை அளிப்பதாக உள்ளது.

இருப்பினும் அவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியச் சிந்தனையில் உள்ள தளத்தில் பயணிப்பதால் சற்று நிம்மதியாகவும் உள்ளது. எவ்வாறாயினும் இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று வேறாகப் போட்டியிடுகின்றவர்கள், கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் என்று அனைவரையும் ஒன்றிணைக்கின்ற பயணியை நான் தேர்தலின் பின்னர் முன்னெடுக்கவுள்ளேன்.

அவ்விதமான எனது செயற்பாடானது எமது மக்களின் விடுதலைக்கான பயணத்தில் முக்கியமானதாக இருக்க முடியும் என்றே கருதுகின்றேன். அந்தப் பணியை நான் நிச்சயமாக தொடருவேன்.

கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற பிளவுகள் களையப்பட வேண்டும். கட்சியில் இருந்து வெளியேறிவர்கள், வெளியேற்றப்பட்டவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அவர்களையும் கட்சியுடன் இணைத்துப் பயணிக்க வேண்டியது அவசியமாகும். ஆகவே அதற்காக தேர்தலின் பின்னர் நிச்சயமாக செயற்படுவேன் என்றார்.

## 20 முன்னாள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் காலத்தில் அமைச்சர்களுக்கு அவ்விதமான வீடுகள் மீண்டும் வழங்கப்படுமா அது தொடர்பில் புதிய அரசின் கொள்கை என்னவென்று உயர்மட்ட அதிகாரியொருவரை வினவியபோது, அது குறித்துப் பின்னரேயே முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி செப்டம்பர் 21 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது துணைவர்களின் அரசாங்கச் சலுகைகள் குறைக்கப்படுமென்று அறிவித்திருந்தது.

## தமிழ் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிறீதரன் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித்தேர்தலில்பொதுக்கட்டமைப்பின் வேட்பாளரை ஆதரித்திருக்கின்றோம். தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக எங்களது முழு செயற் பாடுகளையும் முன்னிறுத்தி யிருந்தோம். குறிப்பாக, தமிழ் இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழ் மக்களுக்கான வடக்கு - கிழக்கு இணைந்த அரசியல் தீர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்த பொதுக் கட்டமைப்பின் வேட்பாளரைஆதரித்தோம்என்பதுஉண்மை.

ஆனால், அந்த வேட்பாளருக்காகப் பயன்படுத்தப்பட்ட சங்குச் சின்னத்தை வேறு சிலர் இப்போது தமது கையில் எடுத்திருப்பது முரண்பாடானது. அதனை அவர்கள் அவ்வாறு செய்திருக்கக்கூடாது என்பது எனது கருத்தாகும்.

தமிழர்களது ஒற்றுமை, தேசத் திரட்சி. தமிழர்களை ஒன்றுபடுத்துதல் என்ற காரியத்துக்காக ஆற்றப்பட்ட அந்த விடயத்தை ஒரு அரசியல் தரப்பினர் தமது சின்னமாகக் கையில் எடுத்திருப்பது ஒரு முரண்.

தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்கள் நியமனங்களில் திருப்தி இருக்கிறதா, இல்லையா என்பதற்கு அப்பால் இப்போதைய காலச்சூழலில் கட்சியினுடைய வெற்றிக்காக உழைக்கவேண்டும். அதுவே எனது நிலைப்பாடு என்றார்.

இந்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் முதலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

சிறீதரன் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, பொதுக்கட்டமைப்பின்ஜனாதிபதிவேட்பாளரது சங்கு சின்னத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரே இப்போது அபகரித்துள்ளனர். இதனால் அவர்களைத் தேசியப் போலிகள் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர்கள்ஒன்றியம் அறிக்கையில் கண்டித்திருந்தனர்.

## வெள்ளப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புரை விடுத்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்படுமாறும், நிவாரணப் பணிகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

### போரைத் தீவிரப்படுத்தி

# முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங்கேற்றியோர் ஜே.வி.பியினரே

### அருட்தந்தை மா.சத்திவேல் சாடல்



தமிழர்களுக்கு எதிராக தமது உறுப்பினர்களை உள்நுழைய வைத்து யுத்தத்தை தீவிரப்படுத்தியதோடு முள்ளிவாய்க்கால்இனப்படுகொலையை அரங்கேற்றியவர்களும்மக்கள்விடுதலை முன்னணியினரே.இவர்களின்காலத்தில் அரசியல் தீர்வுக்கும் வழியில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள தனது ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது -

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்படுத்தல் எனும் தலைப்பிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51/1 இலக்க தீர்மானத்தை ஏற்க மாட்டோம் என ஜனாதிபதிஅனுரகுமாரதிசாநாயக்கதலைமையிலான இடைக்கால அரசு தீர்மானித்து. ஐ.நா. மனித உரிமைகள்பேரவைக்கும்அதனைஅறிவித்துள்ளது. இது வியப்புக்குரிய விடயமல்ல.

ஆனால், தெற்கின் மாற்றத்துக்கான அரசியலோடு நாமும் இணைவோம் எனக் கூறி தேசிய மக்கள் சக்தியின் கட்சி சின்னத்தில் வடக்கு கிழக்கில் வாக்கு கேட்பவர்களும் மாற்றம் எனும் முகத்தோடு சுயேச்சையாக வாக்கு கேட்பவர்களும், தமிழர்களின் வாக்குகளால் வென்ற பின்னர் அரசுக்கு முண்டு கொடுப்போம் என சிந்தித்துக்கொண்டிருப்பவர்கள் தங்கள் முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்கின்றோம்.

இல்லையேல், முள்ளிவாய்க்கால் இரண்டுக்கு வழிவகுத்த தமிழினத் துரோகிகளாக வரலாற்றில் இடம்பிடிப்பீர்கள் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சூழ்நிலையை தேசிய மக்கள் சக்தியினர் பயன்படுத்தி சிங்கள பௌத்த பேரினவாதிகளும் அவர்களால் கட்டமைக்கப்பட்டுள்ள படைத்தரப்பினரும் வடக்கு கிழக்கின் வாக்குகள் இன்றி எங்களை வெல்ல வையுங்கள் என்று நேரடியாக கூறுவதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 3/2 பெரும்பான்மை ஆசனங்களை குறிவைத்து தேசிய மக்கள் சக்தி கவர்ச்சி அரசியலை செய்துவரும் சூழ்நிலையே ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்துக்கு பதில் அளித்துள்ளதன் மூலம் தமிழர் விரோதப் போக்கை வெளிப்படையாகவே கையில் எடுத்துள்ளதோடு, தமது அரசுக்கு பேரினவாத கருத்தியல் கொண்டவர்களும் அவர்களால் கட்டமைக்கப்பட்ட படையினரும் தமக்கு பாதுகாப்புக் கவசமாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள பௌத்தத்துக்கான முன்னுரிமையை நாம் பாதுகாப்போம் என ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியினர் கூறியுள்ளதோடு, இடைக்கால அரசாங்கம் அமைத்ததும் பௌத்த தலைமைகளை தேடி தேடிச் சென்று உங்கள் கட்டுக்குள் இருப்போம் என்பதன் அடையாளமாக தங்கள் கைகளில் பிரித்து நூலை கட்டிக்கொள்வதோடு அவர்கள் காலில் விழுந்து ஆசியும் பெற்றுக்கொள்கின்றனர். இங்கு பக்திக்கு அப்பால் அரசியலே மேலோங்கியுள்ளது எனலாம்.

கடந்த 1971 மற்றும் 1988 /89 காலப்பகுதியில் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தின்போது முன்னணியினரின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் சித்திரவதைக்குள்ளாகி கொல்லப்பட்டனர். சமூக புதைக்குழிக்குள் தள்ளப்பட்டனர். இதனை செய்த படையினரை அடையாளம் காட்டி நீதி கேட்க இன்று வரையுமா துணியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசியலுக்காக ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் (இவரை 20 வருட சிறைக்குள் தள்ளிய மஹிந்த சர்வதேச அழுத்தத்தின் காரணமாக விடுதலை செய்தது பழைய கதை) அவர்கள் தயாரித்த அறிக்கையை ஐ.நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கொண்டு சென்று நீதி கேட்ட காலமும் உண்டு. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி அவர்களின் உறுப்பினர்களாக கருதப்பட்டவர்களின் சமூக புதைகுழி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டபோதும் அதற்கான விசாரணையை தொடர்வதற்கு முன்வரவில்லை. இதுவே இவர்களின் அரசியல்.

அத்தகைய படை கட்டமைப்புக்குள் தமிழர்களுக்கு எதிராக தமது உறுப்பினர்களை உள்நுழைய வைத்து யுத்தத்தை தீவிரப்படுத்தியதோடு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றியவர்களும் மக்கள் விடுதலை முன்னணியினரே. இவர்கள் சர்வதேச விசாரணையை எந்த வகையிலும் அனுமதிக்காததோடு உள்நாட்டு விசாரணை என தமிழர்களின் கண்களிலும் சர்வதேசத்தின் கண்களிலும் மண்ணைத் தூவுவதற்கே முயற்சிக்கின்றனர். இவர்களின் காலத்தில் அரசியல் தீர்வுக்கும் வழியில்லை.

தற்போதைய ஆட்சியாளர் காலத்தில் தமிழர் தேச மக்களாக அரசு பயங்கரவாதத்தின் உச்சத்தை அனுபவிப்போம் என்பது மட்டும் உண்மை. இதற்கு முகங்கொடுக்க ஜனநாயக வடிவில் 2009 இற்கு முன்னரான நிலையில் தேசமாக அரசியல் எழுச்சி கொள்ளல் வேண்டும். தற்போதைய நிலையில் தேர்தல் அரசியல் அதற்கு முழுமையாக உதவப்போவதும் இல்லை.

காரணம், தமிழர் தேசத்தை அழிக்கும் தமிழ் தேச புல்லுருவிகள் தேசம் என்றும் படர்ந்துள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாளிகளும் தேசமெங்கும் பலமாக முகாம் அமைத்துமுள்ளனர்.

சுயேச்சை முகத்தோடும், தமிழர் தேசிய கவசத்தோடும் தேர்தல் களத்தில் முகமூடியோடு நிற்கின்றனர். வாக்காளர்களை கவர்ந்து பேசி அதிகார நாற்காலிகளை தமதாக்குவதே இவர்களது நோக்கம். இவர்களை அடையாளம் காண்போம்.

தேர்தல் அரசியலுக்கு அப்பால் பலமான மக்கள் அரசியலை முன்னெடுக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம். அரசியல் யாப்பின் பாதுகாப்போடு கட்டமைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த பேரினவாதம் முள்ளிவாய்க்கால் 2 இற்குள் எமைத் தள்ளி பூகோல அரசியலுக்குள் எம் அரசியலை கரைத்துவிடும் அபாயமும் உள்ளது.

இந்தியா அரசியல் சுயநலம் மிக்கது. இனி என்றுமே எமக்கு உணவுப் பொட்டலத்தை வானத்திலிருந்து போடாது என்பதை மனதில் இருத்தி, சுயநல அரசியலுக்கு அப்பால் பயணிக்க வழிவகுப்போம். - என்றார். (05)

# விருப்புவாக்கின் அடிப்படையில் வெற்றிபெற்றோர்கள் தெரிவாம்

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு



எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் விருப்புவாக்கின் அடிப்படையிலேயே வெற்றபெற்றவர்கள்தெரிவுசெய்யப்படுவார்கள்.எனவே அதில் மக்கள் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை என்று தேசியமக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசியமக்கள் சக்தியின் வேட்பாளர்கள் வவுனியாவில் வெள்ளிக்கிழமை தமது வேட்பு மனுவைத் தாக்கல்செய்தனர். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் -

அனைத்துஇனங்களையும்உள்ளடக்கியசக்திமிக்க வேட்பாளர் அணி வன்னியில் களம் காண்கின்றது. அந்தவகையில் ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஊழல் மோசடி ஏனைய துஸ்பிரயோகங்கள் அற்ற நேர்மையான ஆட்சியை அமைப்பதற்கு நாங்கள் ஒன்றுதிரண்டுள்ளோம். மக்களின் ஆணைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

மக்கள்ஆணையைபெற்று சமாதானமாக நின்மதியாக வாழக்கூடிய ஒரு தேசத்தைக் கட்டிஎழுப்புவோம்.இதேவேளை ஊழல் மோசடி பேர்வழிகளை நிராகரிக்க வேண்டும் என்று மக்களிடம் அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

இன்று ஜனாதிபதியின் பெயரை கூறி பலசுயேட்சை குழுக்கள் போட்டியிடுவதாக போலிபிரசாரங்கள் மேற்கொள் ளப்படுகின்றன. அவரதுகையை வலுப்படுத்தும்ஒரே கட்சி தேசியமக்கள்சக்தி என்பதை கூறிக்கொள்கின் றேன். அவ்வாறானவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அத்துடன் இம்முறை நாடாளுமன்றத்தேர்தலில் தேசியமக்கள் சக்தியில் விருப்பு வாக்கு முறைமை பார்க்கப்படாது என்று கூறுவது போலியான ஒரு கருத்துருவாக்கமே. இம்முறை விருப்பு வாக்கின் அடிப்படையில் தான் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அது தொடர்பாக எமது செயலாள்ரில்வின்சில்வாவும்தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்கள் அது தொடர்பாக எவ்வித சந்தேகமும் அடையத்தேவையில்லை. நிச்சயமாக கூடுதலான விருப்பு வாக்கினை பெறுகின்ற வேட்பாளர்களுக்கு முன்னுரிமைவழங்கப்பட்டுஅவர்களேநாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படுவார்கள். - என்றனர்.(05)

# சட்டவிரோதமாக பயன்படுத்தப்படும் அரச வாகனங்கள் பற்றி முறையிடுக

### தொலைபேசி இலக்கம் அறிமுகம்

*அரசால் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் மோசடியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோபயன்படுத்தப்பட்டால் அல்லதுமறைத்துவைக்கப்பட்டிருந்தால்1997 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*இந்தஅவசரதொலைபேசிதொலைப்பேசி இலக்கம் 24 மணித்தியாலங்களும் பாவனையில் காணப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*தகவல் அளிப்பவர்களின் அடையாளம் மற்றும்தனிப்பட்ட விரங்கள்முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*உண்மையான தகவல்களை மட்டுமே வழங்க வேண்டும் எனவும் தவறான தகவல்களை வழங்குபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பூசி மழுப்பும் விசாரணைகள் வேண்டாம்

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை மற்றும் ஜேவிபியின் யாழ். மாவட்டச் செயற்பாட்டாளர்களாக இருந்தவர்களானலலித்குகன்ஆகியொர்காணாமலாக்கப்பட்டமை உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது என்று செய்திகள் வந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. பதில் காவல் மா அதிபருக்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சிஐடியினருடனும் உரிய காவல்துறையுடனும் இணைந்து செயற்படுமாறு பொதுமக்கள் பாதுகாப்புத் தரப்பு பதில் காவல் மா அதிபர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஸ் ஷாப்டரின் இறப்பு, வெலிகமவில் டபில்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காவல் அலுவலர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிகிறது.

இந்த விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டிருப்பது மகிழ்ச்சிதான். தேர்தலை முன்னிட்ட ஒரு நடவடிக்கையாக இரு இருக்குமோ என்ற சந்தேகம் நெருடினாலும் அதன் பொருட்டாவது விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது சிறப்பானதுதான். அதேநேரம் இந்தச் சம்பவங்களில் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களும் அரச படையினரும் அந்தப் படையினருடன் துணை ஆயுதப் படையினர் என்ற பெயரில் இயங்கி தமிழ் ஆயுதக் குழுக்களும்தான். அதிலும் குறிப்பாக சிவராம் கொலையில் எல்லாம் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்தவர்கள் தமிழ் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்தான் என்றே பெரிதும் நம்பப்படுகின்றது. விசாரணைகளில் இந்த நேரடித் தொடர்பாளர்கள் அதாவது அம்புகளை மட்டும் கண்டறிவது போதாது அவற்றை எய்தவர்கள் யார் என்பது, அதாவது இந்தக் கொலைகளை முன்னின்று நடத்தியவர்கள் யார் என்பது தெளிவாகக் கண்டறியப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

மனித உரிமை மீறல்களிலும் போர்க் குற்றங்களிலும் உண்மையைக் கண்டறிவோம் ஆனால் குற்றவாளிகளைத் தண்டிக்கமாட்டோம் என்ற அரசுத் தலைவர் அநுரகுமாரவின் கொள்கைக்கு ஏற்ப இந்த வழக்குகளிலும் குற்றவாளிகளையும் அவர்களின் பின்னணியில் இருந்தவர்களையும் கண்டறிவோம் ஆனால் தண்டனை பெற்றுக்கொடுக்கமாட்டோம் என்று அறிவித்துவிடக்கூடாது.

அதுவும் தவிர, தர்மரட்ணம் சிவராம் கொலை, லலித் மற்றும் குகன் காணாமலாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் மட்டுமல்ல, இன்னும் முடிவுறுத்தப்படாமல் இருக்கும் வழக்குகள் எக்கச்சக்கம் இருக்கின்றன. வடக்கு கிழக்கில் இத்தகை வழக்குகள் ஏராளம் இருக்கின்றன. செம்மணிப் புதைகுழி வழக்குகள், பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கு, உதயன் பத்திரிகையின் பணியாளர்கள் இருவர் மற்றும் சாரதி சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு, யாழ்ப்பாணத்தில் துணைப் படையினராக இருந்த ஈபிடிபியினரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பாக காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஏராளம் உண்டு. அதன் பின்னர் இறுதிப் போர்க் காலத்தில் படையினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் ஏராளம் முறைப்பாடுகள் உண்டு. இவை அனைத்துமே தனித் தனியாக விசாரிக்கப்படவேண்டும்.

ஒப்புக்குச் சப்பாணியாக ஒரு சில வழக்குகளை மட்டும் அதுவும் உலக அரங்கில் பரபரப்பாகப் பேசப்பட்ட வழக்குகளை மட்டும் கண்துடைப்பாக விசாரித்துப் பூசி மழுப்பாமல் அனைத்து வழக்குகளையும் ஒவ்வொன்றாகத் தூசு தட்டி உண்மையான விசாரணைகள முன்னெடுக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது இன்று தங்களை ஜனநாயகவாதிகளாகக் காட்டிக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சிக்கும் பலரின் உண்மை முகங்கள் வெளிவரும்.

# மாறியது காலமும், கோலமும்

### இன்சுவை

'நாம் அக்கம்பக்கம் உள்ளவர்களிடம் நன்கு பழகினால், எல்லோருடனும் சிநேகத்துடன் பழகினால், மற்றவர்களுக்கு உதவினால் நம் தேவைக்கு அவர்கள் ஓடி வருவார்கள். வாழ்வில் நமக்குத் தேவையான குணங்கள் எவை என்றால் போலித்தனம் இல்லாத, சுயநலம் இல்லாத உறவு, கைம்மாறு கருதாத உதவி, எதிர்பார்ப்பு இல்லாத அன்பு.'

நான் வாசித்த ஒரு கவிதை என்னை நிறைய யோசிக்க வைத்தது.

பக்கத்து இருக்கை
பயணியிடம்
புன்னகைகூட
செய்யாமல்
நீள்கிறது பயணம்.
தூரத்து வயலில் சிறுமி
கையசைத்து
கற்றுத் தருகிறாள்
அன்பை.

எழுதியவர் யார் என்று தெரியவில்லை. நம் வாழ்க்கை முறை மாறிப்போய் விட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ரயில் பயணங்கள் தற்போது முற்றிலுமாக மாறிவிட்டன. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் இருந்த ரயில் பயண அனுபவங்களும், தற்போதைய ரயில் பயண அனுபவங்களும் முற்றிலும் வேறானவை. முன்பு 'ரயில் சிநேகம்' என்ற ஒரு வகை நட்புகூட இருந்தது.



அது தற்காலிகமானது; ஆனாலும் இனிமையானது.

அக்கால, அதாவது 10 ஆண்டுகளுக்கு முன்பு, சொகுசு ரயில்கள் கிடையாது. முன் பதிவு செய்திருந்தாலும், ரயில் வந்தவுடன் ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்ளும் நம் இருக்கை எது? எனக் கண்டுபிடித்து, பெட்டிகளை மேலே ஏற்றி, சில மூட்டைகளை இருக்கையின் அடியில் தள்ளி, நம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவே சில நிமிஷங்கள் ஆகும். அதற்குப் பின் அரை மணி நேரம் எல்லோரும் அமைதியாக இருப்பார்கள். ஒரு சிலர் செய்தித்தாள் வாசிக்க ஆரம்பித்து விடுவார்கள்; சிலர் வார இதழ்கள். 10 நிமிஷங்கள் கழித்துப் பார்த்தால், அந்த செய்தித்தாள் அடுத்த பெட்டி வரை ஒரு சுற்றுலா போய் இருக்கும். இறங்க வேண்டிய இடம் வரும்போதுதான் அந்நபர் செய்தித்தாளின் ஒவ்வொரு பக்கத்தையும் சேகரிப்பார்.

ரயில் கிளம்பி கொஞ்ச நேரம் ஆனதும் தன் பக்கத்திலும், எதிரிலும் அமர்ந்திருப்பவர்களை நோட்டம் பார்ப்பார்கள். முதலில் புன்சிரிப்பு; அடுத்து எங்கே இறங்கணும்? (எங்கே போகிறீர்கள் என்று கேட்கக் கூடாது) என்ற விசாரிப்பு. அதற்குப் பின் 'அங்கே யார் வீட்டுக்கு? பெண்ணா? பிள்ளையா?' இப்படி ஆரம்பமாகும் பேச்சு, மெல்ல மெல்ல குடும்ப விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளும் வரை போகும்.

பின்னர் நெருக்கம் அதிகமாகி தங்களுடைய சொந்த சோகங்கள், சொத்து விவரங்கள், உடல் உபாதைகள், மருத்துவ சிகிச்சை என நீளும். அதற்குப் பின் ஒருவர் சாப்பாட்டு மூட்டையைப் பிரிப்பார், எதிரில் உள்ளவரை சாப்பிட அழைப்பார். அவரோ நாசூக்காக மறுத்துவிடுவார். பிஸ்கட் போன்றவையாக இருந்தால், பகிர்ந்து உண்பார்கள்.

குழந்தைகள் அந்தப் பெட்டியில் பயணித்தால், எல்லோரும் அதைக் கொஞ்சி மகிழ்வார்கள். அழும் பச்சிளம் குழந்தையை சமாதானப்படுத்தத் தெரியாத இளம் தாய்க்கு முதியோர் உதவுவார்கள். பயணம் முடிவதற்குள் அந்த பெட்டியில் உள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பம் போல பழகிவிடுவார்கள். தொலைபேசி எண்களைக் கொடுத்துவிட்டு இறங்குவார்கள். பெரும்பாலும் அதற்குப் பின் அவர்கள் தொடர்பு கொள்ள மாட்டார்கள். அந்த சில மணிநேர உறவு எப்போதும் மனதில் தேங்கி நிற்கும்.

முன்பெல்லாம் ரயில் கிளம்புவதற்கு முன் பெயர் பட்டியல் ஒட்டுவார்கள். உடனே ஓடிப் போய் பார்ப்பார்கள். தங்கள் பக்கத்து இருக்கைக்காரர் யார் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அதிகம் இருக்கும். ரயில் வயல்கள் மற்றும் மக்கள் உள்ள இடங்களை தாண்டிச் செல்லும்போது சிறுவர், சிறுமியர் கை அசைப்பார்கள். கடந்து போகும் ஒற்றை விநாடியில் நாமும் கையசைக்கும்போது மனிதநேயமும் அன்பும், அங்கே துளிர்க்கும்.

தற்போதைய ரயில் பயணங்களில் இது போன்ற நிகழ்வுகள் இல்லை. சொகுசு ரயில்களில் பயணம் செய்ய விரும்புகிறார்கள். கண்ணாடி இறக்கப்பட்ட அந்த குளிர்சாதனப் பெட்டிகளில் அனைவரும் சிலைகள்போல மௌனமாகப் பயணிக்கிறார்கள். நிர்வாகமே செய்தித்தாள் கொடுத்துவிடுவதால், அதை வாசித்துக் கொண்டு வருகிறார்கள். உணவும் தரப்படுகிறது. அந்தப் பிரச்னையும் இல்லை. செய்தித்தாளின் மீது ஓர் அவசர பார்வை பார்த்துவிட்டு, தங்கள் கைப்பேசியில் மூழ்கிவிடுகிறார்கள். ஒருவரும் பேசிக்கொள்வதில்லை. பக்கத்து இருக்கைக்காரரைப் பார்த்து ஒரு சிறு புன்முறுவல்கூட செய்வதில்லை. இரண்டு விரோதிகள் ஒன்றாகப் பயணம் செய்வது போல் தோன்றுகிறது. ஜன்னல் இருக்கையில் அமர்ந்திருப்பவர் வெளியே வர வேண்டுமென்றால், மடிக்கணினியில் திரைப்படம் பார்த்துக் கொண்டிருப்பவர்/ அலுவலக வேலை பார்த்துக் கொண்டிருப்பவர் முகம் சிறிது மாறும். அமைதியாகப் புத்தகம் வாசித்துக் கொண்டு போகும் நபர்களும் சங்கடப்படுகிறார்கள்.

முன்பெல்லாம் ரயிலில் பயணம் செய்யும்போது ஒருவர் பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்தால், எதிரே உள்ள குழந்தைக்கு இரண்டு பிஸ்கட் கொடுத்து விட்டுத்தான் அவர் சாப்பிடுவார். எப்போது பிஸ்கட்டில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, ரயிலில் கொள்ளை அடிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டோமோ, அன்றிலிருந்து எவர் எதைக் கொடுத்தாலும் வாங்க மாட்டோம், அப்படிக் கொடுப்பதும் அறவே நின்று போய்விட்டது. மக்களை நூதன முறையில் ஏமாற்றுகிறார்கள். இணையவழிக் குற்றங்கள் பெருகிவிட்டன. ஒருவரையும் சட்டென நம்ப முடியவில்லை. ஊடகங்களில் நாம் பார்க்கும் நிகழ்வுகள், சக மனிதர்களின் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை சுக்குநூறாக உடைத்துவிட்டது.

மனிதன் ஒரு சமூக விலங்கு. நம்முடைய வாழ்க்கை எப்போதும் பிறரைச் சார்ந்தே இருக்கிறது. நம் அனைத்துத் தேவைகளையும், பிறர் தயவின்றி நம்மால் பூர்த்தி செய்துகொள்ள முடியுமா? நமக்கான எல்லாவற்றுக்கும் நாம் சமுதாயத்தைச் சார்ந்து உள்ளோம். நாம் சமுதாயத்தால் உருவாக்கப்படுகிறோம்; சமுதாயத்தால் வாழ்வளிக்கப்படுகிறோம். இந்த நிலையில் எவருடனும் ஒட்டாமல், எவருக்கும் உதவாமல், எவரையும் நம்பாமல்.. இது என்ன வாழ்க்கை என சலிப்புத் தட்டிப் போகும். ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டும், அன்புடனும், ஆசையுடனும் பழகிக் கொண்டு, புரிதலோடு வாழ்ந்தால் அந்த வாழ்க்கை ருசிக்கும்.

மனிதன், தான் வாழும் காலத்தில் எவை எவற்றையோ ஓடி, ஓடி சேகரிக்கிறான். ஆனால் அவனுக்கென்று ஒரு நெருக்கடியான நேரம் வரும்போது அவன் எதை, எதையெல்லாம் தேடி வைத்தானோ, எவற்றுக்காக காலமெல்லாம் போராட்டம் நடத்தினானோ, அவற்றில் ஒன்றுகூட தனக்கு உதவாது என்பதை உணர்கிறான்.

ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால், நமக்கென உற்றுழி உதவ எத்தனை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# மாறியது காலமும், கோலமும்

4ம் பக்க தொடர்ச்சி...........

பேர் உள்ளார்கள் என நினைத்துப் பார்த்தால் அதிர்ச்சியாக இருக்கும்.

நாம் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் நன்கு பழகினால், எல்லோருடனும் சிநேகத்துடன் பழகினால், மற்றவர்களுக்கு உதவினால் நம் தேவைக்கு அவர்கள் ஓடி வருவார்கள். வாழ்வில் நமக்குத் தேவையான குணங்கள் எவை என்றால் போலித்தனம் இல்லாத, சுயநலம் இல்லாத உறவு, கைம்மாறு கருதாத உதவி, எதிர்பார்ப்பு இல்லாத அன்பு.

ஊரில், உலகில் புரட்டும், பித்தலாட்டங்களும், வஞ்சமும், துரோகங்களும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. வரலாறும் அதைத்தான் பதிவு செய்துள்ளது.

ஆனாலும் நல்லவர்களும், ஞானிகளும், உத்தமர்களும், தர்மவான்களும் அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பச்சைக் கண்ணாடி மாட்டிக்கொண்டு உலகைப் பார்ப்பவனுக்கு அனைத்துப் பொருள்களும் பச்சையாகத்தானே தெரியும்?

நாம் துரியோதனன் கண்களைக் கொண்டு உலகைப் பார்க்காமல், தருமர் கண் கொண்டு பார்க்கலாம். அப்போது நமக்கு எல்லோரும் நல்லவர்களாகத் தெரிவார்கள். அதற்காக எல்லோரையும் நம்பி முட்டாளாக வேண்டாம்; கொஞ்சம் முன்னெச்சரிக்கை அவசியம்.

மக்கள் பேராசைப்பட்டு பணத்தைக் கோட்டை விடுகிறார்கள். ஆண்டுதோறும் தீபாவளி சீட்டுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, உள்ளதையும் இழக்கும் பேராசைக்காரர்களும் இருந்து கொண்டுதான் உள்ளார்கள்.

இழந்த பிறகு அழுது என்ன பயன்? மாற மறுக்கிறார்கள். பல சமயம் நாமே வலிந்துபோய் ஏமாறுகிறோம்.

நாம் கேட்கும், படிக்கும் செய்திகள் நம் வயிற்றில் புளியைக் கரைப்பதால் எவரையும் நம்ப பயமாக இருக்கிறது. ஆனாலும் ஒருவர், துன்பத்தில் இருக்கும்போது, நம் மனம் பாறையாக இறுகிப்போய் கிடப்பதில்லை. உடலும், உயிரும் பதற அவர்களுக்கு உதவ எழுகிறோம். நம்பிக்கை தானே வாழ்க்கை!

முதியவர்களை ஏமாற்றுவது கொடிய பாவம். பலருக்கும் கைப்பேசி பழக்கமில்லாததால் சட்டென ஏமாந்து போகிறார்கள்.

தங்களுக்குத் தெரியவில்லை என்பதால் அறிமுகம் இல்லாத ஒருவரிடம் கைப்பேசியைக் கொடுத்து, உதவி கேட்டால், அவர்கள் ஏமாற்றிவிடுவார்களோ? என்று சந்தேகம் ஏற்படுகிறது. தவித்துப் போகிறார்கள். அக்கம்பக்கம் உள்ளவர்களும் அதிகம் ஒட்டுவதில்லை. ஓர் அவசரம் என்றால் பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டுவதில் தயக்கம் ஏற்படுகிறது. யாருக்கும் அநாவசியமாகத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறோம். உறவுகளிடம்கூட அதிக உரிமை எடுக்க மனம் இடம் கொடுப்பதில்லை.

ஆனாலும், மனிதம் இன்னும் முழுவதுமாக மரித்துப்போய் விடவில்லை. இதயத்தில் ஈரம் காய்ந்து போய்விடவில்லை. ஒரு சிறு உயிருக்கு ஆபத்து என்றால்கூட ஓடிவர ஒரு கூட்டம் உள்ளது. முன்பின் தெரியாதவர்களுக்காக உதவும் உள்ளங்கள் உள்ளன. குடியிருப்புகளில் வசிப்போர் கூடிக்களித்து கொண்டாட்டமாய் வாழ்கின்றனர்.

உயிர்ப்புடனும், துடிப்புடனும், பரோபகார சிந்தனையுடனும் பல நல்ல இளைஞர்கள் இன்று இருக்கிறார்கள். வருங்கால தலைமுறை மாசற்ற மனங்களோடு மலரட்டும்.

# 81 கிலோ கேரள கஞ்சாவுடன் வலஸ்முல்லையில் இருவர் கைது

வலஸ்முல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போவல பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வலஸ்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வலஸ்முல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மற்றும் வலஸ்முல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 மற்றும் 42 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 81 கிலோ 690 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வலஸ்முல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## பாராளுமன்ற தேர்தல் 2024

**இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா**

**இடம் - யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கம்**

**காலம் - ஞாயிற்றுக்கிழமை (13/10/2024)**

**நேரம் - பிற்பகல் 3.00 மணி**

கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்

-இலங்கை தமிழரசுக் கட்சி - யாழ் மாவட்டம் -



காலைக்கதிர்
Kalaikkathir

# ஈ.பி.டி.பியின் தேசிய நல்லிணக்கம் எப்போதும் வலுவாகவே இருக்கிறது

## டக்ளஸ் தெரிவிப்பு



கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கி வருகின்றேன். அதனால்தான் எனது அனுபவமும் தூர நோக்குள்ள சிந்தனையும் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தாதெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர்கள், பிரதேச பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர்களை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் -

ஒருவருக்கு நீந்த கற்றுக் கொடுக்கும்போது அனுபவம் அருகில் இருப்பது அவசியம். அந்த சிறப்பான அனுபவம் எம்மிடம் இருக்கின்றது.

தற்போதுமாற்றம்என்றகருப்பொருளைமையப்படுத்தியே அநேகமானோர் பரப்புரைகள் செய்கின்றனர்.

குறிப்பாக மக்கள் விரும்பும் மாற்றம் என்பது அரசியல் மாற்றமாகவே இருக்கின்றது. அந்த மாற்றம் தற்போது மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில்தற்போதுநடைபெறவுள்ளநாடாளுமன்ற தேர்தலிலும்அந்தமாற்றம்வரவுள்ளதாககணிக்கப்படுகின்றது.

இதேவேளை எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது.

அந்த அனுபவத்தினூடாகத்தான் இம்முறை மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரசியல் மாற்றம் ஈ.பி.டி.பியின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தும் என நம்புகின்றேன்.

அத்துடன் ஈ.பி.டி.பியின் தேசிய நல்லிணக்கம் எப்போதும் வலுவாகவே இருக்கின்றது. அதனால்தான் மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கு நாடாளுமன்ற தேர்தல்களில் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலமே அடிப்படையானது என வலியுறுத்தி வருகின்றேன். - என்றார்.

மேலும், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் யதார்த்த அரசியலையும், ஈ.பி.டி.பி. கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தினையும் புரிந்துகொள்ளும் வகையில், கட்சியால் மேற்கொள்ளப்படும் தேர்தல் பரப்புரைகள் அமைய வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும் அதற்கான கடின உழைப்பு மிக அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.(05)

# புத்தளம் விபத்தில் சிப்பாய் இறப்பு



(சியாஜ்)

புத்தளம் கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விலகி விபத்துக்குள்ளானதில் இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு கற்பிட்டி பாலாவி பிரதான வீதியின் கரம்பை பாலத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஆனமடுவ தோனிகலைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இராணுவ சிப்பாய் எனவும் புத்தளம் புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில்பிரேத அறையில்வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# திருமலையில் ரயில் மோதி தாயும் மகனும் உயிரிழப்பு

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தீவரகம பிரதேசத்தில் ரயில் மோதி தாய் மற்றும் மகன் உயிரிழந்துள்ளனர் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சீனக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய தாயும் 10 வயதுடைய மகனுமே உயிழந்துள்ளனர்.

உயிரிழந்த தாயும் மகனும், தந்தை கொண்டு வந்த உணவுப்பொதியை வாங்கிக்கொண்டு ரயில் பாதையை கடக்கும் போதே கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வறிய குடும்பத்துக்காக ராணுவம் அமைத்த வீடு நேற்றுக் கையளிப்பு



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குருவில்வான் கிராமத்தில் வறிய குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினால் அமைக்கப்பட்ட புதிய வீடு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு குறித்த குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 10 ஆவது கெமுனு கோவா படைப் பிரிவினால் அமைக்கப்பட்ட குறித்த வீடு தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர்.பி.ஏ.ஆர்.பி ராஜபக்ஷ தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

இதன் போது குறித்த வீட்டை இராணுவத்தின் வன்னி கட்டளைத்





தளபதி மேஜர் ஜெனரல் , ஜே.பி.சி.பீரிஸ் வைபவ ரீதியாக திறந்து வைத்து குறித்த குடும்பத்திடம் கையளித்தார்.

மேலும் குறித்த வீட்டு வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது,குறித்த குடும்பத்திற்கு இராணுவத்தினால் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (05)




# பரப்புரை நடவடிக்கைகளுக்கு விசேட பாதுகாப்புத் திட்டம்



எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இடம்பெறவுள்ள தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படும் தகவல்களுக்கு அமைய உரிய பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# யாழில் பாடசாலை மாணவியர் மீது ஆசிரியர்கள் முறையற்ற நடத்தை

## வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றோர்கள் முறைப்பாடு



யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவிகளிடம் முறையற்ற நடத்தையில் ஈடுபட்ட இரண்டு ஆசிரியர்கள் மற்றும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காத அதிபர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் கடிதம் மூலம் முறைப்பாடு அளித்துள்ளனர்.

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்கள், பெண்பிள்ளைகளை பாடசாலையின் தனிப்பட்ட அறைக்கு அழைத்துச் சென்று விசாரிப்பது, முறையற்ற தொடுகைகளில் ஈடுபட்டமை என பெற்றோர்கள் முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த பிள்ளைகள் பாரிய மன உளைச்சலை சந்தித்திருப்பதுடன் பாடசாலைக்குச் செல்ல மறுக்கின்றனர்.

இச்சம்பவத்தினை பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளருக்கு தெரியப்படுத்தி அவரையும் பாடசாலைக்கு அழைத்துச் சென்று அதிபருக்கு தெரியப்படுத்தினோம்.

அன்றைய தினம் ஆசிரியர் ஒருவரால் றீப்பை தடியால் அந்தப் பிள்ளைகள் தாக்கப்பட்டு, அதனால் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றபோதும் அதிபரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அதிபரும் இணைந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். ஆகவே, இவர்களை இடைநிறுத்தி விசாரணை மேற்கொண்டு உரிய தண்டனைகளை வழங்குவதுடன் இடமாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவற்றை தாங்கள் செய்வதன் மூலம் எமது பிள்ளைகள் அச்சமின்றி பாடசாலைக்கு சமுகமளிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். - என்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோரால் பொலிஸார், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றிலும் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

# பொலிஸ் வீட்டிலேயே நகை, பணம் திருட்டு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டில் நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன வெள்ளிக்கிழமை திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரை பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிசிரிவி கமராவை திருடிய சிற்றூழியர் கைது

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பொருத்தப் பட்டிருந்த சிசிரிவி கமராவை திருடிய வைத்தியசாலையில் 51 வயதுடைய சிற்றூழியர் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினமான கடந்த வியாழக்கிழமை இரவு சிற்றூழியர் திருடிய காட்சிகள் சிசிரி கமராவில் பதிவாகியுள்ளன.

இதனை அவதானித்த வைத்தியசாலை நிர்வாக பணிப்பாளர் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த நபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# சுழிபுரத்தில் கசிப்புடன் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கசிப்பை எடுத்துச் சென்றவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



## வெள்ளம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து மக்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தந்த மாகாணங்களின் அரச அதிகாரிகளை தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் அந்த நிவாரணங்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அதுவரை மக்கள் அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதியமைச்சிற்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு நன்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 6,018 குடும்பங்களைச் சேர்ந்த 24,492 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

23 நிவாரண மையங்களில், 584 குடும்பங்களைச் சேர்ந்த 2,200 பேர் தற்போது பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தின் ஊடாக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அரச அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலைமைகள் பற்றிய தகவல்களை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அழைப்பு நிலையம் மற்றும் 0112136136, 0112136222, 0112670002 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரிவிக்கலாம் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

## 114 சீனர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம், கண்டி - குண்டசாலை பகுதியில் சீனப்பிரஜைகள் இணையவழி நிதிமோசடியில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்தபோது, 47 அறைகள் கொண்ட மாளிகையொன்றை வாடகைக்குப் பெற்று இந்த மோசடி செயற்பாடுகளை முன்னெடுத்துவந்துள்ளமைக்கானதகவல்கள் கிடைத்துள்ளன.

தொடர்ந்து பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கைகளால் குறித்த சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 17 பெண்களும், 97 ஆண்களும் அடங்குகின்றனர்.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 300 கைபேசிகள் மற்றும் 15 கணினிகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## ஜனநாயகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போரின் பின்னரான சூழலில் தமிழ் மக்கள் ஒற்றுமையை மையப்படுத்தியே தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். அந்த வகையில் தொடர்ச்சியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாம் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

இந்தக் கூட்டணியில் குறைகள், நிறைகள் இருந்தாலும் கூட, தமிழ் மக்களின் விருப்புக்கு அமைவாகவும், அவர்களின் அபிலாஷைகளைப் அடைந்து கொள்வதற்காகவும் இணைந்து செயற்படும் முக்கியமானதொரு அரசியல் சக்தியாக இருக்கின்றமை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும்.

எமது கூட்டினை பலவீனப்படுத்துவதற்கு அண்மைய நாட்களில் எதிர்மறையான பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், தமிழ் மக்கள் யதார்த்தத்தினை நன்கு அறிவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்த வகையில், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவே இருக்கப்போகின்றது. ஆகவே தமிழ் மக்கள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை பலப்படுத்துவதன் ஊடாகவே ஏகோபித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும்.

அதற்காக வடக்கு, கிழக்கு பூராகவும் தமிழ் மக்கள் தங்கள் ஆணையை உயர்ந்த அளவில் வழங்க வேண்டியது தவிர்க்க முடியாதவொன்றாகின்றது என்றுள்ளது.

## ஜனநாயகக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனக ரத்நாயக்க ஆகியோர் தமது செலவின அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளவர்களில் முக்கியமானவர்கள்.

இந்நிலையில் அனைத்து வேட்பாளர்களும் இன்று பிற்பகல் 3 மணிக்குள் தங்கள் நிதி விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

## இன்று 3 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஸ் ஸ்காப்டரின் இறப்பு, வெலிகமவில் டபிள்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்றதுப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## 196 ஆசனங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹா மாவட்டத்தில் 19 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 24 அரசியல் கட்சிகள் மற்றும் 17 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 902 பேர் போட்டியிடுகின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் 18 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 27 அரசியல் கட்சிகள் மற்றும் 19 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 966 பேர் போட்டியிடுகின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் 15 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 18 அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 486 பேர் போட்டியிடுகின்றனர்.

கண்டி மாவட்டத்தில் 12 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 22 அரசியல் கட்சிகள் மற்றும் 12 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 510 பேர் போட்டியிடுகின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில் 11 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 15 அரசியல் கட்சிகள் மற்றும் 13 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 392 பேர் போட்டியிடுகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 11 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 18 அரசியல் கட்சிகள் மற்றும் 07 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 350 பேர் போட்டியிடுகின்றனர்.

காலி மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 05 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 264 பேர் போட்டியிடுகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 09 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 312 பேர் போட்டியிடுகின்றனர்.

பதுளை மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 15 அரசியல் கட்சிகள் மற்றும் 05 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 240 பேர் போட்டியிடுகின்றனர்.

கேகாலை மாவட்டத்தில் 09 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 14 அரசியல் கட்சிகள் மற்றும் 04 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 216 பேர் போட்டியிடுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 308 பேர் போட்டியிடுகின்றனர்.

புத்தளம் மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 24 அரசியல் கட்சிகள் மற்றும் 15 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 429 பேர் போட்டியிடுகின்றனர்.

மாத்தறை மாவட்டத்தில் 07 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 05 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 220 பேர் போட்டியிடுகின்றனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 07 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 16 அரசியல் கட்சிகள் மற்றும் 09 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 250 பேர் போட்டியிடுகின்றனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் 07 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 22 அரசியல் கட்சிகள் மற்றும் 42 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 640 பேர் போட்டியிடுகின்றனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 23 அரசியல் கட்சிகள் மற்றும் 21 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 396 பேர் போட்டியிடுகின்றனர்.

வன்னி மாவட்டத்தில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 24 அரசியல் கட்சிகள் மற்றும் 27 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 423 பேர் போட்டியிடுகின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் 05 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 16 அரசியல் கட்சிகள் மற்றும் 07 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 184 பேர் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 27 அரசியல் கட்சிகள் மற்றும் 22 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 392 பேர் போட்டியிடுகின்றனர்.


திருகோணமலை மாவட்டத்தில் 04 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 14 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 217 பேர் போட்டியிடுகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 12 அரசியல் கட்சிகள் மற்றும் 03 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 135 பேர் போட்டியிடுகின்றனர்.

பொலன்னறுவை மாவட்டத்தில் 05 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 13 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 120 பேர் போட்டியிடுகின்றனர்.




# இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலிலிருந்து விலகிக்கொள்கின்றேன் என்கிறார் மாவை!



இலங்கை தமிழ் அரசு கட்சியில் சிலரின் தன்னிச்சையான முடிவுகளை நான் ஏற்கவில்லை. அதனால் தேர்தல் அரசியலில் இருந்து விலகியிருக்க தீர்மானித்து, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலிலிருந்து விலகி இருக்கிறேன் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்து சென்று தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் அரசு கூட்டணியினர் வெள்ளிக்கிழமை மாவை சேனாதிராசாவை சந்தித்து கலந்துரையாடினர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் -

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் தெரிவின்போது எம்மால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர்களை புறந்தள்ளி தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து வேட்பாளர்களை நியமித்துள்ளனர். அதனை நான் ஏற்கவில்லை. அதனால் இம்முறை தேர்தலில் இருந்து விலகியிருக்கிறேன். ஆனாலும் நான் தமிழ் அரசு கட்சியில் இருந்து விலகவில்லை.

தமிழ் அரசு கட்சியில் வேட்பாளர் பட்டியலில் நிராகரிக்கப்பட்டவர்கள் வேறு கட்சிகளில் போட்டியிடுகின்றனர்.

நாங்கள் ஒன்றுபட்டு இன விடுதலைக்காக போராட வேண்டியவர்கள். இவ்வாறு பிளவுபட்டு நிற்பது துயரமே.

எனவே, இந்த தேர்தலின் பின்னராவது மனஸ்தாபங்களை விட்டு அனைவரும் இன விடுதலைக்காக ஒன்றுபட வேண்டும். - என்றார். (05)

## ஒருகொடவத்தை சுங்க முனையத்தில் நச்சுத்தன்மை வாய்ந்த ரின்மீன்கள் மீட்பு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நச்சுத்தன்மை வாய்ந்த ரின்மீன்கள் ஒருகொடவத்தை சுங்க முனைய களஞ்சியசாலையிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட ரின் மீன்களின் மொத்த பெறுமதி 215,000 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இந்த ரின் மீன்கள் சுற்றாடல், வனஜீவராசிகள், வள வனங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தியினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

பிரபாத் சந்திரகீர்த்தி இது தொடர்பில் தெரிவிக்கையில் -

இந்த நச்சுத்தன்மை மிக்க ரின் மீன் தொகைகளானவை கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ரின் மீன்களை ஏற்றுமதி செய்த நாடுகளுக்கே மீண்டும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

(05)

## ஆணின் சடலம் புத்தளத்தில் மீட்பு

புத்தளம், பல்லம பொலிஸ் பிரிவுக்குஉட்பட்டஆடிகம-ரஸ்நாயக் கபுர வீதியில் வெள்ளிக்கிழமை காலை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாகமீட்கப்பட்டவர்65வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் இவர் 5அடி6அங்குலம்உயரமுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சடலமானது பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைபல்லமபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ஊழல் இனவாத அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அனுரகுமாரவுக்குக் கிடைத்த பெருவெற்றி

## பிமல்ரத்நாயக்க கூறுகிறார்



ஊழல் அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அனுரகுமாரதிசநாயக்க ஜனாதிபதியானதற்கு கிடைத்த வெற்றி என தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிமல்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தோல்வியிலிருந்து தப்புவதற்காக ஊழல் மற்றும் இனவாத அரசியல்வாதிகள் இந்த முறை தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர் அடுத்த தேர்தலில் அவ்வாறான அரசியல்வாதிகள் வேட்பாளர்களாக நிற்காத நிலையை ஏற்படுத்தியமை பொதுத்தேர்தலிற்கு முன்னர் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெருவெற்றி எனத் தெரிவித்துள்ளார்.

அனுரகுமாரவை ஜனாதிபதியாக தெரிவு செய்யதமைக்காக மக்களிற்கு நன்றிதெரிவிக்கவேண்டும்,இதுஇறுதியில் ஊழல் இனவாத அரசியல்வாதிகளின் அரசியல்வாழ்க்கையைமுடித்துவைத்தது என அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமாரவிற்கு வாக்களித்தன் மூலம் மக்கள் சிறந்த செயலை செய்தனர் இது இறுதியில் ஊழல் அரசியல்வாதிகளை அகற்றியது,தோல்வியஷ் தவிர்ப்பதற்காக இந்த அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.(05)

# ஹெரோயினுடன் இருவர் கல்கிசையில் கைதாகினர்

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட மற்றும் ஒபியன் சந்திக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனகல்கிசைபொலிஸ்குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கல்கிசைபொலிஸ்குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புக்களின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரத்மலானை மற்றும் கல்கிசை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 41 மற்றும் 45 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரிடம்இருந்து06கிராம்120மில்லி கிராம் ஹெரோயினும் மற்றவரிடம் இருந்து 12 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயினும்கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து,கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காககல்கிசைபொலிஸ் நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைகல்கிசைபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாதுகாப்பு அமைச்சு செயலரை சந்தித்தார் சீனத் தூதுவர்




கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள பாதுகாப்புத் தலைமையக வளாகத்தில் வெள்ளிக்கிழமை பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தவை (ஓய்வு) இலங்கைக்கான சீன தூதுவர் குய் ஜென்ஹோங் சந்தித்தார்.

சம்பத் துய்யகொந்தவுக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் கலந்துரையாடல்ஒன்றுநடைபெற்றது.

சந்திப்பின் போது தூதுவருடன் நினைவுச் சின்னங்களையும் பரிமாறிக்கொண்டார்.

இந்த சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரிஎயார்வைஸ்மார்ஷல்பத்மன் டி கோஸ்டாவும் கலந்து கொண்டார். (05)

# வாள்வெட்டில் காயமடைந்தவர் சாவு இறப்பு எண்ணிக்கை இரண்டாகியது

ஓமந்தை, கதிரவேலு பூவரசன்குளம் பகுதியில் வியாழக்கிழமை காணி பிணக்கு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் மரணமடைந்ததுடன்மற்றொருவர்படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்தார்.

வவுனியா, ஓமந்தை, கதிரவேலுபூவரசன்குளம் பகுதியில் காணி தொடர்பான முரன்பாடு வியாழக்கிழமை வாள்வெட்டில் முடிந்தது.

குறித்த காணியில் மாமன் மற்றும் மருகன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர்கள் இருவர் மீதும் மிளகாய் தூளை அள்ளி வீசி வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டதாக ஊர்மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான ரூ.திலீபன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்தார். சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2024இல் வெளியிடப்பெற்றது